உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்

# ஸ்ரீசிவகாம சுந்தரியம்மை

# சதகம்.

OFFICE OF THE REGISTRAR OF
3- JUL 1925
MADRA

இது,

மாயூரத்தைச்சேர்ந்த கல்லித்தக்குடி [illegible]

திருநாரணசாமிஐயர் அவர்களால் இயற்றியது

மஹாவித்துவான்

ம. க. வேற்பிள்ளையவர்களால்,

ஒருவாறு பரிசோதித்து,

குமாரமங்கலம்

பொ. பெரியதம்பிப்படையாட்சி என்பவரால்

சிதம்பரம்

ஸ்ரீபாலாம்பிகாவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925.

விலை அணா 4

உ

சிவமயம்.

OFFICE OF THE REGIS
3- JUL 1925
M

# சிவகாமியம்மை சதகம்.

இந்நூல் பாடியருளினவர் மாயூரம்தாலுக்கா கல்லத்துக் குடியென்னுங் கிராமத்தில் அவதரித்தவர். கிருஷ்ணசாமிஅய்யர் என்னும் நாமதேய முடையவர். அய்யாவைய சுவாமி என்று இவரை அக்காலத்தில் எல்லோரும் வழங்கி வந்தனர். சத்திபூசை செய்பவர். இவர் மழைபெய்யாதிருந்த காலத்தில் பலபெரியோர்களுடைய வேண்டுகோளின்படி "நெருப்பாயெரிகின்ற கானலை நீக்கிநிறைந்தமுகில்" என்பதை முதலாகவுடையஒருபதிகத்தைச் சிவசத்தியின் மீதுபாடி உடனே மழை பெய்வித்தவர். அம்மழை பெருமழைபா யிருந்தது கண்டு அம்மழை சுருங்கவும் அச்சத்தி மீதுபாடிச் சுருக்கினவர். இன்னும் இவைபோன்ற சத்தி பக்தி விசேஷமுடையவர் மாயூரத்திலுள்ள அபயாம்பிகைசதகம், ஞானசோபனம், ஞானக்கும்மி, சச்சிதானந்தப்பள்ளு முதலியவேறு பிரபந்தங்களும் பாடியவர். இவருடைய காலம் சற்று ஏறக்குறைய 100-வருஷம் வரையில் இருக்கும். இவர் பின்பு மஹாசிவக்ஷேத்திரமாகிய ஸ்ரீசிதம்பரத்திற்குச் சென்று சிவகாமியம்மைசதகம் என்னுமோர் நூலையும், சிவகாமியம்மையுலா என்னும் பிரபந்தத்தையும், நடராஜப்பெருமானோடு சிவகாமியம்மையைத் தரிசித்தவுடன் பாடியருளினார். சிவசத்தி திருவருட் பேற்றிற் சிறந்தவர் யென்பதிற் சந்தேக மில்லை.

இந்நூலைக் குமாரமங்கலம் பெ. பெரியதம்பி படையாட்சி யென்பவர் ஒரு பிரதியைக் கொண்டே ஆராய்ச்சி செய்வித்து அச்சிற் பதிப்பித்துத் தற்காலம் வெளிப் படுத்தினார் இவருஞ் சத்திபக்தியிற்சிறந்தவர். நல்லொழுக்க முடையவர் சதகம் என்பதற்கு நூறுசெய்யுளை யுடையது என்பது பொருள்.

இங்ஙனம்,
அடியார் குமாரன்
பெ. பொன்னம்பலவன்.

74·8111
456

உ

சிவமயம்.

சீர்பூத்த மங்கலச்சொற் சேர்ந்திலகுஞ்
சோணாட்டிற் சிறப்புற் றோங்குஞ்
ஆர்பூத்த பொழில்புடை சூழ் சிதம்பர
மாஞ்சேஷத்திரத்தைக் கருதி நாளும்
பேர்பூத்த புகழுடை மூவாயிரத்தி லொருவ
ரெனப் பெருமை வாய்ந்த
ஏர்பூத்த நடராஜ வள்ளலது பங்கி
லுறை இறைவி தாட்கே. 1

பூமாது பொருந்திய நல்லூற்றுக்குடி பதியி
னிற் பூச்சார் குலத்தில்
சேமாதி பத்தியினிற் றனத்தானே
யெப்பர்வர் நிகரில் கீர்த்தி
தாமாதி புகழ் பண்டத்த கிருஷ்ணை
னெனும் பெயரனத் தரணிமீது
பாமாலை யெனுமொரு நூற் சிவகாமிச்
சதகமெனப் பணித்தான் மன்றே. 2

அத்தகைனற் சிறப்புடைய சிவகாமி
மான்மியத்தை அளிகள் தேடி
நத்துமலர் வாவியுடைக் குமார மங்கல
மதனின் நிலவும் வன்னி
உத்தமனென் மரபுடைய பெரிய தம்பி
வள்ளலெனும் முதித வேடான்
சித்த மகிழ்ந்திட விதனை முயற்சி
[illegible] ட்டான் சிறக்கமன்றே. 3

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224329
சென்னை-600 008

031,16NK49 NK

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்

# ஸ்ரீசிவகாம சுந்தரியம்மை சதகம்.

## காப்பு.

சிவகாமசுந்தரிமேற் சீர்ச்சதகம் பாட
அவகாமியமா வசலும்—நவமாய
தில்லைநகர்மேவுஞ் சின்மயனுங் கற்பகத்தின்
பிள்ளையடி காப்பென்றே பேசு.

சத்தத்துள்ளே சதாசிவமாகியே தழுவும் பரிசமிதிற்
சாருமகேசுரன் ரூபமுருத்திரன் ருனுரும் ரசமே
உற்றருள் விட்டுணு மனத்தினிலே யயன் ஒங்காரத்தினுளே
[illegible]ரிஸமயுடன் புகழ்குண்டலியாகி உதித்தெழு பேரொளியே
நத்தும்பல கலைபாகம வீட்டில் நடம்புரி அம்மேயுன்
ஞானமெனக்குப் பொருநதருள் வாயே நடுத்தடமாமுனிலே
சித்தமுவந்திடுஞ் சிட்டர் மனததுட் சிறந்த நிரஞ்சனமே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 1.

தோத்திர வெளியாய்த் தொக்குவும் வளியாத் தொடர்விழிகன
தோன்றியசிங்ஙுவை யப்புவுமாகியே சூழாக்கிராணமது [லாகித்
பாத்தருள் புவியாலிவையால் வந்திடு பல்விடயாதிகளாய்ப்
பண்ணிய கர்ம மெத்தனைகோடி பகர்க்கெளிதோ வமலி
சூத்திரதாரியா யெனையறியாமலே தொந்தமென்றூட்டினையே
சொந்தமகனெனவினியாகிலுமுன்றோன்றருண்மெய்ப்பொருளே
தேற்றியபரமனு நின்றுமகிழ்ந்த சிதம்பர மங்கலையே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 2

ஆங்காரம் புவிசித்தமுமே புனலாகிய புத்தியது
அக்கினியாகி மனமாருதிவாயுவு மந்தாமே யுளமாய்
வாங்காதிப்படி தத்திமிதாவென வரிகயர் சலேமேலே
மாட்டியிழுத்தினி யாட்டிய வல்வகை மாநிலத்தாரறிவார்
சாங்காலெப்படி யுன்வழிகண்டு தனித்திடவு மறியேன்
தந்தையே சிந்தையில் வந்துவிருந்த தனிப்பொருளே அனமே
சிங்காரத்திலிருந்த விஞோதியே சிங்காரப் பரையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 3

மயிர்தோல் நரம்புடன் சதையுமெலும்பொடு மண்வடிவானுயே
மருவுசிமூளையு மோடுநீர் மச்சையுமாயுதிரம் புனலாய்
உயிரதுநித்திரை சோம்பல் புசிப்புட னுள்பயமைதுனமும்
மோடல்கிடைத்த விருத்தல் நடத்தலு முற்றிடுகுரோதவளி
வயிருகுரோதமுங் காமமுலோபமும் வன்மதமோகமுமாய்ச்
வஞ்சனைபாக வெடுத்திடு தேகவளப்பமுதீயாகிச் [பொருளே
செயலுன் செயலென தென்றுவுரைத்ததைச் செப்புவை மெய்ப்
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 4

வசனகாசமாய்க் கெமனம்வாயுவாய் வளர்தானங்கனலாய்
வாழுவிகற்பம் புனலானந்தமும் வன்பாராகினையே
நிசமோவிப்படி யெனதாசைப் பதிநீங்காதிருளாகி
நிண்ணயம் பண்ணிய வண்ணமதென்னது நின்மலகாரணியுன்
வசமாயிப்போ மனத்தை யிருத்தருள்வாயொளி நிலேகாண
வந்தருள்வாயினி யிந்துமுகத்தி மனோலய காரணியே
தெசதீட்சைக் கிடமாகி வளர்ந்தருள் தேவிசவுந்தரியே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 5

ஓங்கியபிராணன் அபானன் உதானன் வியானன் சமானனுமாய்
உற்றிடுநாகன் கூர்மன்கிரிகரன் உயிர்தேவ தத்தனுமே
பாங்குடன் வந்ததனஞ்செய னென்றொருபது வகைவாய்வுமாய்ப்
பண்ணியநிர்த்தனம் உன்னுடைநிர்த்தனம் பார்தனிலாரறிவார்
நான்குமறைக்கு முடிக்குளிருந்தொளிர் நன்மணி வான்மணியே

நூற்றவயோகியர் சித்தமமைந்தருள் நாரணி காரணியே
தேங்கிபசங்க நதித்தட மேவிய திரிபுர சுந்தரியே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே, 6

இடைபிங்கலையுடன் சுழுமுனை அத்தியுமிதில் காந்தாரியுடன்
இசைபலம் புடைகுகு சங்கினிபயிரவ னீரஞ்சிதநாடி
அடையும்வாயு பொருந்தி நடந்திடும் அத்தனைநாடியிலும்
அசைவுக்கசைவாய் நின்றவிமேனுதியே ஆதி புராதனமே
கடையும்பரசிவமான திவாகரி கருணைநிதி சரணி
கற்பூரச்சுடரே யென்னகத்திற் சலநதெழுவான் மணியே
திடமுன் ககனமடந்தையளித்தருள் திரிபுரசுந்தரியே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 7

சூக்குமை மூலமதாகியவாக்கு தொடர்ந்தருள் நாபியினில்
தோன்றிடுபைசந்தி யெனும் வாக்குசுந்தர மாகியேதான்
தாக்கியவிருதபமேமத்திமைவாக்குதழைக்கிடுந்தொண்டையினில்
தாண்டியேவைகரி நின்றுவிளம்பத்தழைத்திடுமூக்காலும்
போக்குவரத்தை அறிந்து வரைக்கிடுபுலனை வழிபாலும்
பூண்டுவிருந்த பரம்பரயோகி பூரண பரமநிதி
தேக்குதடத்தி லிருந்தபராபர திரிபுர சுந்தரியே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 8

உற்றிடுசாத்திகம் ஞானமதாகும் உற்றிடு ராசதமும்
ஊணிய கிரிகையில் நின்று விளம்புமுயர்ந்திடு தாமதமே
பத்தியயிச்சையுமா யுலகாருடன் பண்ணிய தீவினைகள்
பலபலகோடியில் நிலவரமாகியே பாசமுதித்திடவே
தத்தியமுக்குண வடிவெனநின்ற சவுந்தரகாரணமே
தன்னையறிந்தவர் தன்மதிநின்று தழைத்தருள் பூரணமே
சித்திதரும் பரயோகினி மோகினி திரிபுரசுந்தரியே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 9

மூவ்வகையாகிய ஆங்காரங்கள் முடித்திட வேணுமினி
முளரியோ ராயிரத்தெட் டிதன்மீதில் முதிர்ந்ததவக்கொடியே

எவ்வகையாகிய சீவகங்களு மெண்டிசையம்பரமாய்
யிந்திரர்வானவர் சந்திரர்சூரியர் யெண்கணனார் அரியும்
மவ்வகையான மயக்கிலிருந்துனை வந்தனைசெய் தறியார்
வாமியேபர சிவகாமசவுந்தரி வண்டணிகுழன்மானே
செவ்வகையாகி யிருந்தவினோதியே திருகிருஷ்ணனார்துணையே
சிற்சபை நிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 10.

கருவருவாசற் கிருவிரல்கீழே காணருள் திரிகோணங்
கந்தன்றுணைவன் ஐந்துகரத்தோன் கருதிய ஆனைமுகன்
மருமலர்க்குழலி வல்லபையுடனே வளரருள் கணபதியை
வந்தனைசெய்தே சிந்தனைவளிபால் வளர்சுழுமுனைநாடி
உருவஅகாரமகார மகண்ட ஒளிப்பிரபை குண்டலியும்
உற்பனமான உகாரஅடிக்குள் ளுகந்திட நின்றுமினித்
திருவருள்பொங்கவேஊமையெழுத்தினில்சிறந்துவுதித்தருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே, 11

நின்றருள் சுவாதிட்டான மோராறிதள் நிறைமலர் சதுராகும்
நிகிலதடங்கள் திடம்பெறவேயுடல் நேர்படப் பண்ணிவரும்
தெண்டுகமண்டலம் நான்முகன் வாணியுஞ் சிறந்தயிடத்தமையு
திகழ்பொன்னிறமாம் பூவதிகாரஞ் செயயருளான வயன்
கன்றுமகிழ்ந்திட நின்றுகளித்துக்கனத்த தவததுடனே
கஞ்சனடிக்குள் விழுந்து துதித்துக்கருமயல் வேரறவே
சென்றுதவத்தோர் மெச்சியதொன்பதி சேவடியே யருள்வாய்
சிற்சபைநிர்தத னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 12

அருள்மணிபூரகம் வாவியும் பத்திதழ்அம்புலி பாதிநகர்
அதிலமைசெந்திரு வரியுமமைந்திட அண்டரெல்லாம் புகழ
வருமணிசங்கு கெதைச்சிலை சக்கரம் வாளாமாயுதமும்
வாகுளபிங்கள மேனியுங்கண்டு மகிழ்ந்து துதித்திடவே
தருமபிராம சவுந்தரநாயகி சற்குண தவநேமி
சற்குருரூபி சிவப்பரயோகி சராசர கீர்வாணி

திருமருவுங் குழையணியும் பராபரிதேவி மக மாயி
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 13

உற்றவகாகத ருத்திரனுர் மனையொளிவளர் திரிகோணம்
உச்சிதமாகவே பத்தொரிரண்டித முமைமனையாளாகி
வெற்றியுள்மார்பினி லுற்ற மழுக்கலைமேவிய திரிசூலம்
விதிதலையுற்றிட வுலகிலயப்படும் விமலனையே பணிந்து
நித்தியமானதவத்தை யடுத்துள் நிற்கருள் முக்கனியே
சேமவிநோத சரோருக பாதநிரஞ்சனமே யனமே
தித்தியெனத்தின மத்தளவோசை சிறந்துமுழங்கிவரச்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 14

அறுகோணங்கள் விசித்துவிளங்கியே அணியித ழீரெட்டும்
அம்மைமகேஸ்வரி செம்மையுடன் வளர்ஆதி மகேஸ்வரனும்
மறிசூலங்களணிந்த கபாலமதிக்கலை கங்கை யணி
மன்றினிலாடிய விரண்டுபதங்கள் மணிச்சிலம் பார்ப்பமைய
[illegible]வகா லுற்ற மனைக்கரசாளனை உற்று நினைத்துருகி
[illegible]பொருளின்பம் வரும்படி தந்தருள் உமையேபாநிதியே
சிறியேனை சிந்தையில் வந்து விரித்தருள் திரிபுரசுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே 15

ஆக்கினைவட்டமதாகி யகாரம் அமைந்தருள் சுந்தரமாய்
ஆதிமனோன்மணி சோதிசதாசிவன் ஐந்தொழில்அதிகாரி
நோக்கியஐமுக லிங்கமுமாகுவ ளுத்தமர் சிந்தையிலே
உற்பனமானவன் அற்புதகாரணன் உய்யுதவத்தரசன்
தாக்கிபரெண்டிதழ் வானகரொன்பதத் தாழ்கள்பணிந்துருகி
சற்குருரூபி யுனைப்பணியும் வகைதந்தரு ளந்தரியே
தேக்கியசின்மய வாருதியாயின திரிபுரசுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 16

அதிசெயமாகிய பதியொரு ஆறுமதிற் பல தேவர்களும்
அங்கியுடன் கதிர்மண்டலமுங் குளிதான மதித்தடமும்

உதிசெயுங்குண்டலி யிடைபின்கலையென ஓடிய சுந்தரமும்
ஒவ்வது மரகதம் நவ்வது பொன்நிறம் உருகு மவ்வேவபளிங்காம்
ஆதிசெயுஞ் சியது செம்புநிறத்திடுந் தோன்றும் வகாரமது
சுத்தகறுப்பு நெருப்பு யகாரமுஞ்சூழ் புகை நிறமாகும்
சிதம்பரமாகிய ஏகாக்ஷர வெளிசேரும் பராநிதியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே 17

மூலமும் நாலாயிரவியும் மண்டல மூன்றெழு நாலாகி
முன்மதிபரையினில் நாலாயாண்டருள் மோனபராபரமே
கோலியநால்பதி மூலமுநாலுயிர் குறிநடுவிது வெட்டுங்
கோதைநலந்தரு மீதறிந்தோதிப கூர்மன மாதவர்கள்
ஞாலமனத்திடை மேலே யிருந்த நடுக்கடலே யனமே
நம்பினவென்பவ துன்பமகன்றிட நற்றவமே யருள்வாய்
சீலசவுந்தரி மர்தாகாசித் திரிபுர சுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே

கலையொருபதிநா றங்குலம் பாயவே கடுகிய சீவகலை
கருவழியோடியே நின்றுமறைத்திட கர்மகிரீஸ் வரியாள்
நிலையொருயெட்டது வந்தவழிக்குள்ளே நின்றிடஞானகலை
நித்தியமாக விழுத்து மறித்திடும் நெறியுடல் வினைமாயம்
அலையதுநீங்கிய போதிதைவிட்டு அகன்றிடும் நாலுகலை
ஆருயிர்பின்னொரு கர்மவியாதியி லடரவே தானுமைபச்
சிலையுருபேதக மெத்தனை வித்தைகள் செய்தாய் திரிபுரையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 19

இப்படியாகக் கழன்றிடுகால்களை யீசன தாக்கினையால்
இருவினையொப்பியே மலபரிபாகமு யேகியிசைந்தருள்பின்
ஒப்பியசத்தி உயிர்க்கலை நாலையுமூர்த்த நடுத்தடமே
உற்றருளாலே யிழுத்ததி லேற்றுவள் உண்மை சிவத்தோடே
அற்புதமாக்குவ தெப்படிசெப்புமருட் கொடியே யரசே
அண்டர்புகழ்ந்தருள் மண்டலமேல்வரை யாரமுதே யனமே
செப்புமறைச்சிர மெய்ப்புடனே வளர்திரிபுரசுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மதனிடத்துள சிவகாமித் தாயே 20

வாசியிருந்த தடத்தை அறிந்தபின் மன்றில் பிறப்பாக்கும்
மங்கையே யுந்தன் பெருங்கருணாசல மந்த்ரமா நகரம்
பேசியமைந்தருள் மாமவுனந் தனில் பேரொளி யாகவேதான்
பிண்டமுமண்ட அகண்டமுமற்று பெருங்களிப்பா யமையும்
நாசியின் மன்றுள் தேகாகாசவெளி நாதனிருந்த தடம்
நந்தியிருந்ததும் செந்திபடர்ந்ததும் ஞானமிர்தம் பாவ
தேசுவிரிந்ததும் உன்னருளல்லவோ திரிபுரசுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மதனிடத்துள சிவகாமித்தாயே 21

ஆத்தும தத்துவம் வித்தியாதத்துவம் ஆசிவதத்துவமும்
ஆறாறுக்குனுள் ஈராறுக்கலை யாகிய தேகமது
தோற்றிய சஞ்சிதபிராரத்வாதி தொடர்ந்தவ காமியமாய்
தோன்றிய ஜென்மமெத்தனை கோடி தொகைப்படவே யெளிதோ
ஆற்றைப்பணிந்தோ னிடத்தமலி யுனை ஆரறிவார் புவியில்
அன்பாறிந்து பெரும்பொருளென்று அமைந்து துதித்திடவே
சேத்தவிசால பராபரயோகியே திரிபுரசுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 22

விந்துவிசித்திலுந் திருகோணத்திலு மேவியதறு கோணம்
மெய்ப்பது மத்திதளெட்டிதழ் பூபுரமேவிய திருவாசல்
இந்துதடத்தி லிருந்தமுதே யுனதின்ப சுகப்பதமே
யெண்ணிய வென்னுடை யெண்ணமறிந்துயின் பமுதந் தருவாய்
ஐந்துமுகத்தியே ஆறுமுகத்தியே ஆரண நான்முகமே
ஆதிசிவத்தியே நாதவெளிச்சியே ஆகம மோகனமே
சிந்துகவிக்கன மாரிபொழிந்திடுஞ் சித்தமெனக் கருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 23

அணிபருள்விந்து அதிற்றிரிகோணம் அதின்மே லெண்கோணம்
அடவொருபத்தும் அதிலொருபத்தும் அதின்மே லீரேழும்
இணை இதழ்வட்டம் இதிலிரு நான்கும் ஈரெட்டிதழாகி
யின்பமதாகியமூரே கைத்தடம் இசைந்தருள் பூபுரமும்

பணிவிடை செய்தருள் மங்கையரெங்கும் படர்ந்து நிமிர்ந்தவையா
பாரதிசெந்திரு வீணைகள்கொண்டு படர்ந்தருளாகிவளர்
திணியிருளூற்ற திரைக்கந்தப்புறஞ் சிவனுடன் வாழ்பவளே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 24

ஊறியவிந்துவி லம்மையிருக்க வுயர்ந்திடு முக்கோணம்
உற்றிடுசத்திகள் நால்வரிருக்க உதித்திடு மெண்கோணம்
ஏறியசத்திகள் எண்மரிருக்க பிசைந்த திசைகோணம்
இன்பமுடனருள் சத்திகள்பத்து மிருந்தொரு பதுகோணம்
கூறியவீரைஞ்சு சத்தியிருக்க குறித்தீ ரெழுகோணம்
கோதையரீரெழு மாதரிருக்க குலாவிய அட்டதளம்
தேறியவெண்ம ரிருந்திடு காரணி தேவி பராபரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 25

சோடசபத்திரந் தன்னிலீரெட்டுந் தொடர்ந்தருள் சத்தியர்கள்
சுந்தரமாகிய பூபுரவீதி தொடர்ந்தருள் முத்திரைகள்
ஆடரவங்க ளணிந்தபயிரவர் அஷ்ட பயிரவிகள்
அங்கனேமித்தியசத்தி யீரெட்டும் அமைந்தருள் தேசிகர்கள்
பீடமுமஞ்சுடனொன்று மிருக்கப் பெருங் களிப்பாகவேதான்
பேணிபவாசலி லெண்ம ரிருக்கப் பிரமனரியாலும்
தேடரிதாகிய யோகபுராதன தேவி சௌந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 26

யோகினியொன்பது பேர்களமைந்திட உற்றிடு சத்தியர்கள்
ஒங்கிய ஆயுதபாணிகளாக உதித்தமதிப் பிரபைபோல்
மாகிரணத்துடன் நின்று உலாவமதித்தெழு வெண்டிசையோர்
வந்துசரணம்புகழ்ந்து துதித்திட மாதவ யோகியர்கள்
வாகுளசிந்தையில் நின்றுநடம்புரிவான் மணிதேன் மொழியே
வஞ்சரபத்தியே சூலினிரூபியே மாலினிபயிரவியே
ஸ்ரீகமலாசன மீதிலமைந்தருள் திரிபுர சுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 27

காலம்நியதிராகம் புருடன் கலையுடனே வித்தை
காணுமாயை வித்தியாதத்துவங் கடந்தெழு காதலியே
ஆலம்மூலதாய் நீண்டருள் கண்டர்க்கதி சயமாமனையே
அகிலாதாரியே திரிகுணாதீதமே ஆனந்தாரிழையே
சூலகபாலமுமான் மழுவாடத் துடியொரு கரமாடச்
சுந்தர அந்தமும் அண்டமுமாடச் சுழலவே முசலகனுஞ்
சீலசிதம்பர மண்டலமீதில் சிறந்து நிறைந்தமையும்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 28

வல்லிமனோன்மனி ஆதிபுராதனி வாம சுவாசினியே
வாணிமாமது நின்றசடாதரி மந்தர ரூபினியே
சொல்லியமாமறை தன்முடிமேல் வளர்சோதி அநாதினியே
சுப்பிரகாசியே நிற்பவதாசியே சுந்தர யோகினியே
பல்லுயிர் தங்களுயிர்க் குயிராவளர் பாவனையானவளே
பத்தர்விசால நடனவிநோதி பஞ்சவன் னுதிபமே
தில்லைமூவாயிரர் தங்களகத்திற் சிறந்த சௌந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 29

ஆரணமேபல ஆகமமேஉபி ராகமமே அளமே
ஆமனையேயுனை நாமகள் செந்திரு அனுதினமே பணியத்
தாரணியெங்கும் அநேக சென்மங்கள் தவத்துரு வாகியவர்
தானேயெடுத்து மெய்ஞ்ஞான மறிந்து தனையறியா ரவர்கள்
நாரண கிருஷ்ண துணைச்சி மனோலய ஞானபராபரையே
நற்பினவெங்கலி துன்பமெல்லா மறஞானமிர்தம் பாவ
சீரணி அம்புய பாதமணிந்தருள் திரிபுர சுந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 30

எனதென்பது வொன்றுண்டா வுலகிலிருவினை விவகாரம்
எதேதோ வறியாமலறிந்து மிப்படியாய்ச் செனனக்
தனதென்றே பலபேதகமாகியே தகையும் வெருளியினில்
சார்ந்தினி மாய்ந்துபிறந்து சிறந்து தார்குழலார் மயலில்
கனதுன்பப்பட வாட்டாதுன தருள் கைவல்லிய மருள்வாய்

கைலாசகமதி லொயிலாகவே வளர்கருணாகர னிதியே
திணமன்புருபா யோகினி மோகினி திவ்வியாபரணமணி
சிற்சபைநிர்த்த னெம்மத்த னிடத்துள சிவகாமித்தாயே 31

கன்மமயக்கால் கனபேதகமாய்க் காரிருள் மயல்மூடக்
காதலினால்வெகு வேதனைகொண்டு கலங்காதே யுனது
நன்மைவரும்படி முக்குண மைம்புல நடனமெல்லாமகல
நாதனிருந்த தடத்திற் கருணைநருக்கிட ஞானருள்வாய்
தன்மம் வளர்த்ததோ ரந்தரபோக சௌந்தர கீர்வாணி
சகலமனோரத சீலிபுராதனி சர்வேசுவர யோகி
சின்மயகாரணி நாரணி பூரணிசிந்தாமணி நிதியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 32

தாய்மாரெத்தனை தந்தையரெத்தனை தாரணிமீதிலினி
தன்மகனெத்தனை தந்தனமெத்தனை தன்மனையெத்தனையோ
ஓயாமாய விசித்ரமனேக முதித்துமரித்தவர்கள்
உன்னின வுற்றறி யாதருளாலே யுழன்றது போதுமினி
மாயாரூபி த்ரியம்பகரூபி மனோலய காரணியே
மன்றுடியேவளர் குன்றுதொளிவளர் மாமணி திரிபுரையே
சேயானெனவேகடாக்ஷம் பொருந்தியேதிருவடிவைத்தருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 33

மூலத்துதி செயுங்குண்டலி யக்கினி மூண்டருள் மண்டலியே
முளரியோ ராறில் பிரமனரிபரன் முச்சுட ருதயமுமாய்
ஆலத்திரையினில் தாரகையொளிபோ லணியணிபாயழகும்
அப்பால்விந்து சிவந்தநிறத்துட னருணமலர்க் கமலம்
கோலியேநின்ற குமாரி மனோன்மனி குஞ்சரன்மாதாவே
கோமளி யாமளி சாமளி வியோம குலேசுர சுந்தரியே
சீலபராபரி யத்துவிதத்தி செழித்த சௌந்தரியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 34

இன்னிசைபாடுவ ராடுவர்தியானம தெண்ணிய தேவதைகள்
எத்தனைகோடி வகைக்குளும் பக்குவரெத்தனை பத்தர்களோ

உன்னிலைகண்டு சொரூபானுபூதியி லுற்றிடுமுத்தமரில்
ஒன்றறியாதவ னுன்னருளிற் றவனைக்கவருள் புரிவாய்
மின்னிய பேரொளி யானவியோம விசாலபுராதனமே
வேதசிரத்தில் நடம்புரி கிருஷ்ணன் மிகுந்து புகழ்ந்தருளே
சென்னியில் நின்று பொருந்தியகாரணி செகமோகன மணியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 35

கனகக்கொடியே பரமற்றிடமே கருதிய பேரொளியே
கைலைத்தடமே நீலம்பரமே கமலாசன மணியே
பனகற்பரனே புவனேஸ்வரியே பதினால் கலைவடிவே
பரமேஸ்வரியே கருணாநிதியே பகலே மதியிரவே
மனைநற்கலையே திருவைப்பரிவே மதிசூடிய அனமே
மநிறற்றவமே யமயப்பருவ மனமூற்றருள் புரிவாய்
தினகற்கொளியே வெளியேயமலை செகமோகன வடிவே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 36

என்தனையாள்வாய் என்றுனைநாடி யெண்ணிப் பலகாலம்
இன்பமதாக வொண்பொருளனேக மீசனு மெனதாவி
வந்துபுகுந்தே நின்றருள்ஞான மண்டலமே பூண
வஞ்சனைமோகம் வஞ்சகர்சினேகம் மங்கைய ரனுபோகம்
இந்தவைவேக மெந்தனைநீங்க விருண்மலமது நீங்க
எண்டிசையும்நீ யென்றுமகிழ்ந்து விருவினை துயர்மாளச்
சிந்தனைசெய்வா யந்தரிநீலி சிறீபீடாசனியே
சிற்சபைநிர்த்த னெம்மதனிடத்துள சிவகாமித்தாயே 37

மனிதரைநம்பலை மக்களைநம்பலை மனையாள் தனமுடனே
மாடுடன்வீடு பொய்மாய்கையை நம்பலை மன்றல்விளையுடலைத்
தனதெனநம்பலை யுனதிருபொற்பதந் தனிலேயன் னினைவுணரத்
தந்தருள்கர்ம மெந்தவிதம் வருஞ்சாதக பக்ஷிகள்போல்
கனவிலுமுன்னின வியாபகமாகக் கலந்திட வென்னறிவுங்
கருதவேண்டியே பொருந்தியேனின்றெனைக் காணவேவந்துநிபாய்
சினமற நின்றவ திருதபமிடத்துட் சித்தர வடிவ[illegible]
சிற்சபைநிர்த்த னெம்மத்த னிடத்துள [illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

உன்னைத்துதித்து முன்னடியாரென்ன உலகோர்கதை செய்ப
உடலையெடுத்தும் சுபவாகத்தி லாழ்வினை விவகாரம்
இன்னமடுத்தே மனமிது புண்ணுறை யிறையவே யென்வைத்தாய்
என்னுடை யிச்சை யுன்னுடை யிச்சை யேகமதாகியபின்
தன்னபிமான விகற்ப சங்கற்பம் தாழ்வாகவே யருள்வாய்
சச்சிதானந்த நிட்சிவயோகி சங்கரி யபிராமி
சின்னருவத்தே யுன்னருளுற்றே சேரருள்வாய் பரையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 39

ஒருநாழிகையினில் முன்னூற்றறுபது ஒடிய கலையூடே
யூகமதாகிய மாமனசோடியே யூழ்வினை விவகாரம்
கருநாநாவித மண்டசவுற்பித கருதிய சுவேதசமுங்
கர்மசராயுச யோனியிலெழுவகை காணுறு தோற்றமிதில்
வருநானாவித தேகமதாகுக வாசமதா மெனவே
மயலுறுகாதலு மகலவே யுன்னருள் மலரடியே யருள்வாய்
திருநாராயண யனுர்வாணிகள் தினமும் பணியுமிலே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 40

ஆதாவற்றவனல்குள புத்தர்க ளறியா தறிவடியேன்
அசவையறிந்தினி யுனதுபதங்களி லமைபவரந்தருவாய்
போதக முற்றவிசால பரத்தியே பூரண வனுபவமே
பொன்னகர் மீதிலிருந்த விநோத புராதனமே யனமே
வேதவிநோதியே யக்கரமொன்றில் விளங்கியபேரொளியே
மீதானத்திருவே வடிவே மலைமெய்ப்பொருள் சிற்பரையே
சீதாவம்புச லோசனி யந்தரி சிந்தூர மங்கலையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 41

காயக்கமாகிய மோகமடுக்குட் கவிழ்ந்து விழுந்தடியேன்
கரைபறியாமலே நீந்தவென்று விருகால் தவளித்திடவே
மாயக்கலாதிகள் போலேயாலும் மதிப்பிரமை தன்னாலும்
மாளவேநின்றடியேனை தம்பச மாககர் தோணியினில்
நீங்கஞ்சோர வியுழுத்தென் னடுக்கமும் நெஞ்சசதறலும் நீக்கி

நேயசிவத்துள் நெருப்பினிற் காய்ச்சியேபநீக்கருள் முக்கனியே
சியக்கராதியில் நின்றவினைஞறியே சிதம்பர மங்கலையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 42

எந்தனதாசை யென்றெண்ணிய மும்மதி ளிடிபட வினைவிதி
பெரிபடவாணவ கோபுரமெற்புயிருள் மலவனகநாளும
வெநதிடவினைதன தாகவேயெண்ணிப விசையவலிபவர்கள்
வேதனைகொண்டு வுறங்கியே மாளவேவெற்பாசாள னருள்
தங்கெதனைபாளுஞ் சவுந்தரயோகினி தற்பரமெய்ப் பொருளே
தானவணுகிய மாதவர் தன்மதி தநதுடன் வாழ்பவளே
திந்திமிதிமியென துந்துமியோசை சிறந்து முழங்கிவரச்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித் தாயே. 43

மேகநிறத்திடு குழலணிசோசவே விரிகதிர் மணிபணியும்
வெண்பிறைபோல் நுதல்அம்புயமால்விழிவிகசிதகுமிழ்மொக்குள்
வாருளமொழியிதழ் பவளகபோலம ணிநித்திலதந்தம்
மகரக்குழைபணி செவிகளதளவொளி வரிசைகள் பெறுமணிகள்
[illegible]கபணிப்பிரபை கங்கணியடியவர் நற்றவ யோகியர்கள்
நட[illegible]லறிந்து பேரின்பமுதந் தரும் நன்முலைவாளிடையும்
சிறீகமலாசன மீதிலமைந்தருள் செவந்தபதத்தழகி
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 44

நித்தியகாரணி நிட்களகாரணி நிர்ப்பயதாரணியே
நிர்ச்சிவயோகினி சிற்சுகபோகினி நிர்மலதாரணியே
முத்தர்கள் வாசனி முக்கியகாரணி முச்சுடராகினியே
மூதாவாகியே பூதாமேழினு மூலமதாகினியே
சுத்தவசுத்த துவைத அதுவித் தூலமருக்குமமே
சுரூபநிரூபம தாகிய சுந்தர சுகவம.வாம் பரமே
சித்துபதேசினி நற்கமலாசனி சிறீகிருஷ்ணனுர் துணையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 45

பத்தியுள்வாகினி வெற்புளபூரணி பங்கய மோகினியே
பண்புளடாகினி யந்தரவேகினி பரமசிவா சினியே

சத்தியதாரணி தற்பரோரணி சங்கரரூபிணியே
சந்தனபாவினி சம்பிரமதேகினி சாரதியென்மனத்துள்
நித்தியபூரணி நிட்களகாரணி நிச்சயசிற்சொரூபி
நின்னருள் பாவினி மன்னுயிர் காரணி நீ தயவாகியருள்
சித்திதரும் பொருளுத்தமியம்பிகை சீரடி தந்தருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 46

ஆதாரத்தியே யறுகோணத்தியே யட்டபுசத்திருவே
யணிமாசத்தியே மகிமாசத்தியே அஷ்டாங் கதிசெயமே
வேதாகமத்தியே நவகோணத்தியே வீசுபுகழ்க் காசே
விண்மாயத்தியே கனநே யத்தியே விதரண வம்பரையே
நீதானுற்றன தானுவகிரதியும் நேர்பட நின்றறவே
நிச்சாரத்தையே பெறும்நேசத்தையே நினைவாலே யருள்வாய்
சீர்தானத்தியே வரதாம் புயத்தியே திரிகோணத் தரசே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 47

அண்டர்கள் முனிவர்களெண்டிசையாளர்க ளம்பரயோகியர்கள்
அந்தணர்மறைகள் செந்திருவனிதை அந்தபனோர்மனைவி
தொண்டர்கள் பணியும் வண்டணி குழலே சுந்தரமணிநுதலே
சொந்தமாயெனையுன் மைந்தனெனவே தோன்றியே நின்றருள்
விண்டருள்வசனீ யம்புசநயனீ வேதபதித்தலைவி [வாய்
விண்பகவருணை யன்புளசரஸீ கிரிசுட ரொளியாளி
தெண்டிசைபுகழு மம்பரவடிவே சீர்பூத்தருளிசையும்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 48

நெஞ்சகமுன்னுடை சஞ்சிதமாமலை நீயேத்துள்ளே யிருந்து
நிறைமலசோடையில் வளரனமாகவே நிமலருறைசலமே
கொஞ்சியே வளரவ ரஞ்சிவினைநிழ்யே கோமளியாமளியே
கோகிலவாணி மனோன்மணி சாதிகூறிய பேரொளியே
கஞ்சமுதக்கிப நாயகி நேபகி நாரணி யாரணியே
நடுநகர்மீதினில் நடமிடுபார்வதி நமசிவபகவதியே

செஞ்சரணும் புசதண்டை சிலம்பு சிறந்து குலுங்கிவரச்
சிற்சபைநிர்த்த னெம்பரத்தனிடத்துள சிவகாமித் தாயே. 49

காதலி மூதறிவாகிய மின்னகர் காரணிமனோன் மணியே
கந்துலகன்ற பெருங்கமலா சனிகாமகிரீசுவரியே
பாதகமாவினை யென்னுடைமோக பயங்க ளகன்றிடவே
பாரதிகாளிய மாமுகில் மாரிபோல் பாடவே யனுதினமும்
போதகயாகி யிருக்கவே யுன்னருள் பூரணமே யருள்வாய்
பொங்கரவங்க ளணிந்தருள் சங்கரி புண்டரிகம் புகழத்
தீதறநின்ற பேரின்பமுதந் தருந்திருவரு ளம்பிகையே
சிற்சபைநிர்த்த னெம்பரத்தனிடத்துள சிவகாமித்தாயே. 50

காமேஸ்வரியே பகமாலினியே கஞ்சார் குழலனமே
கனகாசனியே நவயோகினியே சருணாநிதியொளியே
பூமேசுபரியே நவரத்தினங்கள் புனைசுதருள் சுந்தரியே
போதாரமுதே வேதாரணமே பொன்னே பொன்மலையே
நாமேசுவரியே வருணாசனியே நாகராசன் மகளே
நடுநாயகமே சுகதாயன மேசதிருடிய திருவே
சிறிமா மாயிதேவி யாயிதிரிபுர சுந்தரியே
சிற்சபை நிர்த்தனெம்பரத்தனிடத்துள சிவகாமித்தாயே 51

ஏனதென்பது மில்லாதவசத்தை யெமதென் றபிமானம்
யிருள்கும்பக மாடயிடக்தை யென்றகல் வென்றறியேன்
கனமென்பாகிய சோகவசத்தைக் கழலுட்படி யருள்வாய்
கடலேயெனது உடலே யுயிரே கண்மூன் றுடையாளே
தனதம்பரமாய் நவயெந்திரமாய்ச் சகலாகம நிதிகள்
தருமம்பரையாய்ச் சிவசுந்தரியாய்த் தானேவளர் நிதியே
தினமுன்பதமே பணியும் பருவஞ் சிந்தை தனக்கருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்பரத்தனிடத்துள சிவகாமித் தாயே. 52

எந்தாயே யென்னுயிரே யறிவே யேகவெளிக்கரசே
இமவான்மகளே கமலாசனியே யிறையே பருமறையே

வந்தாளெனையே யுன்று ளினியென் மனமே யொருபிடியாய்
வந்தித்தே நிதஞ் சிந்தித்தேகமாய் மருவும்படி யருள்வாய்
முந்தாநேக வநேகவிசித்திர முடிப்பித் தருளமுதே
முதலே நுதலே குடியாயமையும் மோகாம் பாநிதியே
சிந்தாமணியே யணிபுங்கருணைத் தெளிவே நவமயிலே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 53

அன்றிலைபோலவே யென்மனதுன்பதம் மானெனவே கருதி
அநுதினமாரமு தூறியஞானருளனுபவ மாக்கருள்வாய்
மன்றினிலாடிய காலனுமேல்மனை மறிபடக் குறிபாய
மலாருஞசனம் நிலைபது தோணவே வந்தருளந்தரியே
பண்டமலாம்பிகை சிந்துரவர்ணியே பங்கய லோசனியே
பாரதிசெந்திரு மாமகள்வந்தனை பண்ணிய சுந்தரியே
தென்றிசை யோர்புகழ் வதனவிசாலியே திருவேயருள் மணியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 54

கங்குலகண்ட தடத்திடத்திலே காமேசுவரியே
கதிமுதலாளியே திருநயநாதியே கதம்பவன நிலையே
சிங்கமதிலிருந் தசுராள் சிரமுடி சிதறவடித்தவளே
தேவபாபரி போகபுராதனி சிந்மய மாமணியே
யெங்கண் மணிக்கொளியான மகேசுவரி யீசனிடத்தில் வளர்
இன்பவிசாலினி கப்பினபோர்மதி யேறிய வான்மணியே
தெங்கனகாசனி நான்முகிகாரணி சிவரூபந்திருவே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 55

எந்தன்வருத்தமு முந்தன்மனத்தினிலே றருள்வாயினியே
இமைபா சலத்தில் மயிலாயுநிக்க வேகவெளிக் கொடியே
நந்தன் மனைக்குள் மைங்கனெனத்தான் நடமிடு திருகிட்ணன்
நாதன் துணைச்சி வேதபாத்தி நறுமலாளி சோரக்
கந்தசடைச்சி இந்துமுகத்தி கறைமிடற்றோன் மனையே
சைலத்தடதநி யதிமோகனத்தி கண்மூன் றுடையாளே
சிந்துமனத்தில் வந்தகனத்தி திராவிட மொழியருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 56

தாரேறுங்குழல் மதிவதனங்களும் தளதளவென முகமும்
சதுர்மறைமுடியுளமுதிர்மறைபொழிமொழிதழைகுழையணிசெவி
வாரேறும்முலை நவமணியணிபணி வளைபளபள வெனவே [யும்
வானிடை வடபத்திர வயிறும் முந்திச்சுழியும்வளர்நவமணியுடை
நேரேறும்பர வடியவ ரிருதயமே நிலையுட னனுதினமும் [யும்
நெஞ்சமுடனே மிடுவதிசெயவிதான் நிமலையே யமலர்சுகச்
சீரேறும்பத வடிவழகொழுகிய சித்ரபதபுவனி
சிற்சபைநிர்த்த னெம்பித்தனிடத்துள சிவகாமித்தாயே 57

புவி புனல் கனல் வெளி ககனமுடனே பொருந்திய வகமதிலே
புலன்பொறி கரணமும் வல்வினை வெருவிதம்பொருந்தியேநடமிட
நவிபகவன்னமும்தனதெனவிருளினைநலமெனபெலமுடனே [வும்
நமதென பலவிதம்அடியெனதுள்ளம் நடுவெளி யறியாமல்
அவியவே கனவினை குவியவே பலசமைய யாதியில் மறிபடவே
அடிபட பெமவசம் பிடிபடக்கருதி யவத்தைகள் நீங்கருள்வாய்
செவியிற்குருடணி யந்தரிசித்ர தேகவிசாலினியே
சிற்சபை நிர்த்தனெம்பித்தனிடத்துள சிவகாமித்தாயே 58

வஞ்சனைமோகமு மஞ்சவேபுன்னுடை மண்டவமீதிலினி
பண்டியபேரொளி நின்றுஉலாவவே மங்கள பேரியுடன்
நெஞ்சகமீதினில் சஞ்சிதமாகவே நின்று முழங்கிவர
நித்தியபூரண சுத்தமடத்தினில் நிற்கருள் வாயெனையே
அஞ்சுக மாமொழி கொஞ்சியே மோகன அந்தரமா மணியே
அன்பருடாவியி லின்பமதாகவே அமைந்த பராபரையே
செஞ்சாணும்புச வஞ்சிபுராதன தேவிபாசாநிதியே
சிற்சபைநிர்த்த னெம்பித்தனிடத்துள சிவகாமித்தாயே. 59

ஆக்கைக்கிரை தேடியே மாநிலமே லாசாபாசமுடன்
அவத்தைப்படவே தீவினைநல்வினை யாடலையே தனதாய்
நோக்கத்துடனே யெமதாமெனவே நாண்ணிடைமாதருடன்
உடலைப்பொருளா யடரும்மனத்தை யொழியும்படி யருள்வாய்
தாக்கும்பர வாணுதல் பேரொளியே சகலாகம நிதியே

தனையே யறியும் அடியாரறிவில் சாக்ஷாத்காரமுதக்
தேக்கும்பொருளே யருளே யனமே தேசோமணியொளியே
சிற்சபை நிர்த்தனெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 60

அம்மா அரசே அணுவிலணுவே அதீதமெய்ப் பொருளே
அறிவே அறிவுக்கறிவே தெளிவே யமலாகாசமெனும்
பெம்மானிடமே வளர்சுந்தரியே பூரண புத்தமுதே
புகழுன்னடியார் மனமேகுடியாம் பொருளே அரும்பொருளே
சும்மாவவர்கள் விறல் சுழன்றாலே சுழலாதோ வுலகம்
சுந்தரவதனே மந்தா மகளே சுகவாருதி பொருளே
செம்மானமு மாகியகாரணியே தேவாதிப முதலே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 61

பதினோராமிட முன்னிட மல்லவோ பகவதிசிவரூபி
பகலிருளாகியே வினைபலவாகியே பண்ணிய வண்ணமுடன்
எதிரொலித்தனை வகைதேகத்திலு மேறினி விளையாடி [ளே
எவரெவரெண்ணமும் பலவகைபண்ணிய தெப்படிமெய்ப்பொரு
அதனனுத்து வனித்திட சித்த மமைந்தருள் மெய்ப் பொருளே
ஆணைகோட்ட மதாகியே நின்றரு ளம்பரவாரிதியே
இதியாகிப்பல நாளாகிப்பின் றிருவருளாகினையே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 62

முக்குணமைம்புலன் சிக்கிலென்னுயி முழுக்க மயக்கியது
முத்தறுவத்துட் சத்தைநினைத்து முழிக்கவும் பரவசமாய்த்
தூக்கியபோதும் பிறக்கிறபோதுமாய்த் தாரணிவிவகாரம்
சத்தியமாகநினைத் தடியேனும் சகத்தில் மயங்காதே
நிர்குணமான வசத்தை யடைந்து நீசத்தரு ளாக்கருள்வாய்
நிர்மலி நிர்க்களி சற்குருரூபி நிரந்தா போகினியே
செக்கரிளம்பிறை வாணுதலேயுன் சிந்தையெனக் கருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 63

பாவியென்னுயி லுன்னருள் ஞானம் பரந்து வமைந்திடவே
பண்டுவினைக்கடல் துண்டிய முத்தி படர்ந்து தொடர்ந்திடவே

ஆவியில் கிட்டை பொருந்தியே நின்று வறிவறிவே யருள்வாய்
அத்துவித்தத்தியே சற்குருரூபமதான கருங்குழலே
வாவியிற்றங்கிய அன்னமேயென் மனத்தக வான்மணியே
வண்டணிபரமலர் கொண்டுதுதித்திடு மாதவர் தன்பதிவாழ்
தேவிசௌந்தரி யந்தரியம்பிகை தேசோயணி விளக்கே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 64

உடலையெடுத்து மொருவாகததில் வாழ்வினை யாலோடி
உதரம்வளர்க்க மனதுவிகற்பித் தொருகோடி கிளைவாய்க்
கடலின் சலத்தில் மூழ்கியமுழுங்கிக் கரையே றறியாதே
கனசல னத்தா லடியேனினித்தான கருவணுகா தருள்வாய்
வடபத்திரமீதில் வளர்கிருட்ண நாதன் மகிழ் துணையே யனமே
மதிநுதலே யென் னுயிராசே யுன்மலரடியே யெனது
திடவிவகாரம் மொழியவே வேணுந்தில்லையிலே வாழுஞ்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 65

கைலேசங்கரன் றனதானந்தமே தமியேன் நெஞ்சுனைத்
தனதாய் வந்தருள் மிகவானந்தரி சகலாகமமணியே
கைலேசனிட மயிலே யம்பர கதியே மதிநுதலே
கமலையெங்கினும் நிறைஞானந்தருங் கடலேயெனதுடலே
குயிலேகம்பின வடியார் சிந்தையில் குடியாய் வந்தமையும்
கொடியே யஞ்சுரு வடிவேமங்குல குணமே யெந்தனுடை
செயலேவுன்செப லெனவே நின்றினித் திறமா மன்பருளாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 66

அடியார்பங்கினில் வளருஞ்செந்தமி ழுருளாகும் பரையே
அடியேனுந்தனு ளமுதானந்தமே யறியும்படி யருள்வாய்
முடியாவம்பல மணிமாரும்பத முளையாரம் புசமும்
முலைமாதங்கிகள் புடைசூழுந்தின முனிவோர் சிந்தையினில்
குடியாய்வந்தருள் கமலேயிந்திரை குணசெந்தமிழ் வாணி
குலவும்பணிவிடை பலவும் பொருந்தியேகுருயேயருள்நெறியே

செடியார்மும் மலம்படியே யென்மதி செல்வாய் பலவகையாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 67

அம்மையேயுன்னுட கணங்களிருந்தரு ளதிசயமென்ன சொல்வே
அணிபகிரதியே மனோசரஸ்வதியே அவர்களிருந் தமையும் [ன்
மும்மலமாய்கை அகன்றிடு தொண்டர்கள்முறைமுறையாயமுழுகி
முத்தியளித்தருள் நெற்றிவிழித்திட மோனபராநிதியே
உம்மையே இம்மையிலவர்க ளமைந்தருள் உத்தமி சுத்தவெளி
ஒளிகள்பதிசென எந்தனகத்தினில் உரிமைபொருந் தருள்வாய்
சின்மயரூபிணி நின்மலகாரணி செங்கனிவாய் மொழியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 68

ஒருகண்வெண்மதி நிலவொளி வீசவே ஒருகண்கதிர் பகலாய்
ஒருகண்வன்னி பொருந்தியே நின்றருள்உமையேயெனதம்மையே
திருமங்களசுக வேதவிநோதியே திருவம் பரமயிலே
திகழுந்திருவளர் யோகபுராதனி யசைபுந்திரை கடலே
வருமங்கல வருணாசன சுந்தரி மலரும் பிறை நுதலே
வளருஞ்சிவபுர மேவியகாரணி மௌனந்தரு மயிலே
திருமங்கையர் நவகோடிநெருங்கிய செகமெங்கினும் நிறைய
சிற்சபை நிர்த்தனெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 69

நாதமுமாகியே விந்துவுமாகியே நடுநகர் தானாகி
ஈசியினின்றருள் வாசியுமாகியே நற்றவ போதகமாய்
ஆதவமண்டல மங்கியுமாகியே அரி அய னாகி
ஆயணமாகியே காரணமாகியே அகில விராட்டாகி
பேதகமாகி சமையாதியுமாகியே பேணிய திரிபுரையே
பிண்டமுமாகி அகண்டமுமாகியே பேரா யிரமாகிச்
சிதவினோத சிதம்பரமாநகர்த் தில்லையு மானாயே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 70

உன்னையறிந்தவ ரின்னிலமீதினி லுடலையெடுப்பர்களோ
உச்சியின்மீதுள நற்சுவையேயுன் ஒளிப்பிரபை கண்டார்கள்
தன்னையமனையன் சொப்பனவத்தையில் நாவலும் நினையாரே
சந்தசமுமுனைச் சிந்தனைசெய்யவே தானே யமைந்தருள்வாய்
என்னையே யீன்று வளர்த்தரசே சுகவின்பபுராதனமே
ஏழையர் தங்கள் மனத்திலிருந்தருளின்ப சவுந்தரியே
சென்னியில் நின்று நடம்புரிவாயினிச்செங்கனி மாமொழியே
சிற்சபைநிர்த்த னெம்மத்த னிடத்துள சிவகாமித்தாயே. 71

பண்டுவினைக்கடல் மிண்டியதிர்ப்பட பாமரனுகவெனை
பண்ணியதீவினை யெண்ணமில்லாமல் பங்கயமாமனையில்
நின்றுசிவத்தொளி கண்டுபுகழ்ந்திட நிட்டையெனக்கருள்வாய்
நேயிதரித்தருள் காமகிரிக்குளே நின்றசவுந்தரியே
அண்டர் முனிக்கடல் தொண்டர்களித்திட வஞ்சமுகற்கிடமே
அன்புடனின்ற பேரின்பனுபூதியே யாரிழையே யனமே
சென்றுன தம்பரமண்டலமீதெனைச் சேர்த்தருள் வாயினியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 72

முக்கோணத்தியே சற்பாணிச்சியே முக்காலத் திருவே
முப்பாகத்தியே முச்சாரத்தியே மூப்பாழுக் காசே
சற்கோணத்தியே கைப்பாசத்தியே சத்தாதிக்கரசே
தற்போதத்தியே மெய்ப்பாணத்தியே தற்பாதற்புதமே
மெய்க்கோணத்தியே நற்ககனத்தியே மெய்ச்சோதித் திருவே
மெய்ப்பாரத்தியே யுற்பாதத்தியே மெய்க்காலுற்றருளே
இக்கோர்நித்திய முததேவிப்புகழ் சித்தாந்தப் பொருளே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 73

தீவினை நல்வினை நீங்கவே நின்பதஞ்சேவை புகழ்ந்தருள்வாய்
தேவர்கள் மூவர்கள் யாவருமேபணி சிந்துரமோகினியே
நாவணிவாணியுஞ் செந்திருமாமகள் நாடிய இந்திரையும்
நம்பியேநின்னு பொருந்தி மகிழ்ந்தருள் சற்சகயோகினியே

பாவணியம்பரி வியோம்பரம்பரி பயிரவி புபிரவியே
பாகமமைந்தருள் பத்தர்மனங்கனில் பண்புடன் நின்றவளே
சேவணியும்பர தேவிதிரியம்பகி செஞ்சடை மங்களியே
சிற்சபைகிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 74

ஓங்காரத்தியே முக்கோணத்தி லுதித்தெழு குண்டலியே
ஓராறுக்குமே வீராறுக்கு ளொளிப்பிரபை மண்டலியே
ஆங்காரத்தை யழித்திடுஞ் சிந்தையி லமுதாம் விண்டலியே
ஆயன்மனையில் வளர்ந்தருள் கிருஷ்ணர்க் கமைந்த சகோதரியே
ரீங்காரன்பொருள் எந்தனகத்தில் நிறைந்தருள் தந்தருள்வாய்
நீலிபரசுகபாலி தவகுண நித்தியானந்தனியே
இங்காளர்க்கறி யாததயாபரி திரிபுரசுந்தரியே
சிற்சபைகிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 75

வெளுத்தவிபூதி தரித்த சங்கரி விசித்திர வாகினிமேல்
விளக்குலாவிய மலர்க்குழலே வளர் விசித்திர மோகினியே
குளுத்தியாகவே யெனக்கு உன்னருள் குளத்தின தாமுதம்
கொடுக்கவும் வினைவிடுக்கவும் அருள் கொழிக்கவு மருள்வாய்
கிளத்தியாய்வள ரருட்சிவாரதி கிரீடவர்த்தனியே
கிடைக்குமாவுன தடக்குவானகங் கிருபைக்கு ளென்னறிவுந்
தெளிக்கவும் வினை விடுக்கவு மருள் சிறக்கவுமருள்வாய்
சிற்சபைகிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 76

காலம்வீணைப் கழிபவே வல்வினை கர்மம் விபரிதமாய்
கருதிய வறுபது மறுவிதியறிய காணுமலும் வெகுசாய
சாலம்பொருந்திய மாதர்கள் யோனியில் சாவது மாவதுமாய்
தனுவெகுகோடிகள் பிறவிகளெத்தனை தாவுது ஆவியிது
சூலம்பொருந்தி யாவென நீயினி தொண்டர்குழாங்களினில்
சொந்தடிமைக்கடி யாயெனவந்தென் சுகங்களறிந்துணராய்
சீலமனோத ஞானபுராதன சிறுகுளுங் கடலே
சிற்சபை கிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 77

கங்காதரியே கருணாகரியே காமகிரிமடலே
கஞ்சாசனியே பஞ்சாட்சரியே கவுரிமோகினியே
புங்கவடாவஞ் சரணாபரணம் புனையும் பகவதியே
பொன்றுப் சிவனார் நின்றுப் மகிழும்பூரண சனபதியே
மங்காதருளே மன்றாடியதே வணங்கா நகையொளியே
மஞ்சார்குழலே கங்காளினியே மன்பாரொளி விளக்கே
சிங்காசனியே புவனம்பிகையே சீர்கிய கடலே
சிற்சபைநிர்த்த னெம்மந்தனிடத்துள சிவகாமித்தாயே 78

ஆலக்கடலில் சேணதிபண யடியேனுடலாவி
ஆசைப்பலமாய் மோசக்கருவி யால் துற்பெலனகி
காலச்சமனால் பாசத்தடைக்ள் காணப் பிதற்றுதே
காமத்தொழிலை யான்விட்டகலக் கருணைக்கனி யருள்வாய்
சோலைக்கிளியே ஞானத்திருவே சொல்லே யருள்மறைபின்
சாதப்பதியே தவனற்கொளியே சுகமே யருள்மடலே
சிலத்தாசே நவபோகினியே சிவனே தவபுவனே
சிற்சபை நிர்த்தனெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 79

ஒன்றே புணர்வுக்குணர்வே யுயிரேஉயிருக் குயிரமுதே
ஒளியே வெளியே களியே கனியே உமையே பாகதியே
வன்றே நடனதிபவான் மலையே மயிலே யருள்குயிலே
மதிவாணுதலே முதலே பதியே மசகாதிசையாளே
இன்றேநாளே இரவே பகலே யிமையாசல மாதே
இறையே மறையே குறைபா தருளே யினியா னனதுகனி
இன்றேநிதம் பாமற்கருள்வாய் பரசிவமே நவநவமே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே 80

நானொனு மாமயி லாருடனே நசவாகிய மயலில்
நானாவிதமா யாடாதுனது நடிவான் நகாமிநில்
தாராமுதந் தாலே யருள்வாய் சாட்சா காரமுதே
சகுணதிபமே தவமாருதமே சர்வானந்தகரி

பாரூரணியே கனகாசகியே பதியே யறுசமையப்
பதியானவளே கதியானவளே பரமானந்தகரி
தேனாமுதக்கடல்சூழ் நகரில் திறமாகவே வளருஞ்
சிற்சபைநிர்த்த னெமமத்தனிடத்துள சிவகாமித்தாயே. 81

மதம்பரந்திடுஞ் சிமந்தகாதலில் மயங்கியே யெனது
மனந்தளிர்த்திட வனந்தயோசனை மகிழ்ந்து மாயையினுல்
நிசம்பொருந்தியே யலைந்தநினைவினை நிறைந்தகோரமுடன்
நிதந்தகாரமே யிருந்ததும்மற நினைந்தது உன்னருளால்
இதம்பரந்திட இசைந்தருள்புரி யிணங்கு ஞானாசே
இசைந்தபோதக சௌந்தரிதய விரங்குவாயினியே
சிதம்பராதிபன் மடந்தையேமனந் தெளிந்த வின்பருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 82

அடங்கியேயமு தறிந்துஞானிக ளமைந்த தாவதையும்
வறிந்து நிட்டையி லிருநதுகாரண மகண்ட பூரணமாய்
தொடங்கிம்பசுடர் கலந்துவான்முகில் சொரிந்த தாரையினல்
சுகந்தவாடையும் பொருந்துவானகந் துரந்தரிகமுடன்
ஒடுங்கியேபச வடங்குபேரொளி யுதைந்து மேல்விசா
உசந்தமாவினை பசைகது தானெனை யொழிந்து போக்கருள்வாய்
திடங்கொள்காணி சௌந்தரேசுவரி திரியம்ப காரணியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடதுள சிவகாமித்தாயே. 83

வனே தெரியாதனை நானடுத்து இரவும் பகல்பணியேன்
எதொன்றுந் தெரியாதவள் போலே யிருப்பது என்ன வகை
நாளுதியிலே பண்ணிய கன்மம நசித்திட வல்லையோதான்
நிடலைச்சகத்தி னுலைசகள் நீர்ந்திட நன்றுடன் தீவினையுந்
தானேசமனுய் வருகாளருள்வாய் சர்வேசன் மடலே
சற்குரு கிருஷ்ணன் துணைச்சிபாரபரி சாகதருண நிதியே
தேனாமுதே யெந்தாயேயுன் சீரருள் தந்தருள்வாய்
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 84

வளர்ந்தமருத வசந்தமாமறை மலர்ந்தவாணுதலே
மகிழ்ந் தென்னுவியில் பொருந்தியேவளர் மதங்கரூபிணியே
குளுந்தகோமளி நிரஞ்சனாதியே குணங்கள் மூன்றினையும்
குழைந்து தான்வளர் பரம்பராளி கொடும்பதாரணியே
தளர்ந்திராமலே மைந்தனுவியுன் தரும்பு கூர்ந்தனது
சதங்கை கிண்கிணி யணிந்தவம்புச தடங்கள் தானருள்வாய்
மகள்நதமாதவ ருளந்தனில் வளர் சிறந்தவாருதியே
சிற்சபை நிர்த்தனையமத்த னிடத்துள சிவகாமித்தாயே. 85

ஒவ்வைக்கடியே கரிமாமுகனே ஓராறுனவளே
உள்ளத்துளவே கள்ளப்பொறியே ஒருநாழிகை மன்றில்
அவ்வைக்கடியாய் வெகுபேதகமா யாடும் நடனபதி
யறிவுக்கறிவே சிவனற்கலையே யணுவுக்கணுவாகும்
வெள்ளக்கடலே யமலத்துவமே விரிவே தவசமே
வெளிக்கு வெளியே யொளிக்கு மொளியே விரிசுடரானவளே
தென்னுங்கலையே மறையாகமமே திருவே பரயோகி
சிற்சபை நிர்த்தனெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 86

அகந்தையாலறி வழிந்துமாதர்க ளமைந்த காதலினில்
அடைந்து வான்மன துடைந்து வாடு வதறிந்து தாமசமாய்
பகர்ந்ததீவினை வசம்பொருந்தியே பண்ணிபதெது சொல்வாய்
பரம்பரியுனை நினைந்தகாலமும் பகைந்த தாச்சதுவோ
சுகந்தபூடணி நினைந்தபேர்மதி துரந்தரீகமுடன
தொடர்ந்து வாழ்பவனிலும் ப்ரவாகரி சுரந்தவானகரி
திகம்பராபரி வினாந்தபேரொளி சிறந்தவான் மணியே
சிற்சபை நிர்த்தனெம்மத்த னிடத்துள சிவகாமித்தாயே. 87

கூசாதுன தானமுதம் பகலாய்க் கொடியே யருட்கொடியே
குலையாதென தென்றறுவான் பானுர் குறியே நெறிசயகி
பேசாமவுனப் பாவாணுதலைப் பிரியாதினி நாடிப்
போதிசையாய்க் கார்கான் முகில்போற் பெருகும் நவரசமாய்

வாசாமன கோசரமாய்க் கவிதை வரூட்டம் வரமருள்வாய்
பரமேசுவரியே சிவகாமேசுவரி நிசவராகிமாயி
தேசாதேசர் பணியும் பதையூக சிறீகாந்தனன் மடலே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 88

பொல்லாதவரை நல்லோரெனவும் போகாதாசை யினில்
போகும்படியுஞ் சாரும்விதியும் போராடிய தொழிலும்
வல்லாணவனுப் நில்லாதுனது வாராதின மருள்வாய்;
வண்டார் குழலே ஒளிமாமணியே வரைமாமகளீரே
யெல்லாமுனது சல்லாபமதாய் யெக்கும்பர வெளியாய்
இதமாய் வெகு சஞ்சிதமாய் வளரும் இசைவான் புட்கலமே
தில்லாபுரியில் பரமோஸினியாய்ச் சிறந்தமங் கலையே
சிற்சபைநிர்த்த னெம்மத்த னிடத்துள சிவகாமித்தாயே. 89

அரசேயெனது வன்பேசிவ ஞானமுதே யனுதினமே
அருவே யுருவே பரமேசலையே அயிராணியும் வாணி
உரைசேரருளாம் இசைபார்ப்பணியும் உமையே சுகவதியே
புரைவேதகமே சுகபோதகமே ஒளியே வெளி முதலே
கரசோடியா றுடைவானுதலே கருணாகர நிதியே
கலையே நிலையே கைலாசகமே கர்மாதீத மெனும்
நிரைசாலகனும் பொருளே யருளே தெளிவே தேன்மொழியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 90

அக்கரரூபி அட்சரரூபி ஆதிபராசத்தி
அம்பரரூபி திகம்பரரூபி யகண்ட மனோதமே
முக்கண்ரூபி சதாசிவரூபி முகுந்தகளிரூபி
முச்சுடரூபி தவச்சுடரூபி முடிந்தபராசனியே
தக்கயெக்க னகத்தினில்வந்து தழைத்திட வாரமுர்த்
தக்தெனையாளும் பரம்பரயோக சௌக்கர மங்கலையே
திக்குடையாக வணிந்தவளே யருள் சிரருளங்கடலே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 91

மாதவர்வேள்வியும் ஆற்றங்கரையும் மண்டகமது வளமும்
மாமடல் மாதருலாவியவீதியு மங்களமாய் வளரும்
நாதசிதம்பர சிவகங்காசல நந்தமும் மணிமதிளும்
நப்பினபக்தர்கள் பகர்ந்திடுமாதவர் நான்மறையோர் தெருவும்
ஆதவ மண்டபமெனும் பிரகாச மனந்தப் பிரகாசமுமாய்
அன்புடையோர்மதி நின்றவியோம அருந்தவ மாநகரி
நீதநின்றபராபர விண்டொளி தேவி சிகாமணியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 92

புன்னைகள் பூத்திட செண்பகமல்லிகை பூவாசனை வளர
பூரணமாகிய வோடையில் தாமரை புண்டரீகம் மலர
அன்னமுடன் பட்சிகளின்று கலந்து அமைந்து களிப்புடனே
பாசமுதுண்டிடு வண்டுகள்நாத மகண்டமெல்லாம் நிறைய
பின்னையுஞ் செந்நெல் வயல்த்தரை வாளைகள் பேசிக்கழுகேறி
பொருள் வான்முகில் விந்துவிலே வரும் பேருளாளுடையாள்
சென்னிபிலஞ்சலி கூப்பியதொண்டர் சிறந்து புகழ்ந்திடவே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 93

நவமேவிக்கனியே தவமுக்கனியே நவமே தபோபலமே
நடுவுச்சுடரே விரிவுற்றறனே நகமாருத வடிவே
புவனக்கொடியே பவளத்துசிதே பொருளாங் கதிமுதலே
புகழுங்கலையே திகழுங்கமனே பூதாபேதகமே
அவலிக்காசே அருளுக்கருளே யமலைத்திரி புரையே
பசைவுக் கசைவே சுகவுற்பனமே வருணக்கொடி மயிலே
இவனுக்கதி மோகனமாயணியே தேவாதிப நிதியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 94

நெஞ்சுற்றதை நான்சொன்னேன் உனது கிட்டை யெனக்குதவி
நெறிதந்தருள்வாய் சிவசுந்தரியே நிமலைபராசுகமே
வஞ்சத்தகமே யினிமூளாமல் மாவினை வாழாமல்
மனதுற்றருளும் உனதுற்றமர் மலரடி தானருள்வாய்
கஞ்சத்தடமே பாசாங்குசமே கனகாசனபதியே
ககனத்தொனியே திருகிருட்டணனுடை கருணைத்துணைபாளே
செஞ்சொற்பாமே முக்கோணத்திற் சிறந்து விரிந்தவளே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 95

திரிபுரமெரிக்ரி யுரியணி மருள்நிலை திகழ்பர சிவனிடமே
தினவளர் கதிமுதல் நவமணி பணிபணி சிந்தூரமங்கலையே
அரிபிரம சமரர் வாகா சிவசிவ வமலி விமலியெனவே
யலைகடல் ஒலியென ஒருமறையொலியுட னருள்நடம்புரி திருவே
பருவவகை யறிந்தென தறிவி லமைந்து பருகவே யுனதுறதி
பதியவுங்கவிமழை பொழியவுங்கிருபைபருள் பரிபுரமணி குயிலே
திருவருள் மயமுள கருணை நவரசமே தேவாதிப நிதியே
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சிவகாமித்தாயே. 96

ஏழையிவனெனக் குதவிய ரியாருமில்லை யென்றேகருதி
யிணைமலரான திரு பதமதையெனதுள் இலசய விரங்கருள்வாய்
ஊழியின் முதல்வியே யமல விநோதியே உத்தமர் நெஞ்சுதனில்
உதையரவியில் வெகுகோடியுதையமென வருகருணா கரியே
ஆழிகள் சூழ்மணி தீவாந்தரியே ஐங்கர னறுமுகனை
அருள்மக னெனவே பயின்ற காலவிநோதியே யுனது அருள் [யி
சிறருள்நாடி னிதுப் பூரினில்விடெனி லுஞ்செல் [illegible]
சிற்சபைநிர்த்த னெம்மத்தனிடத்துள சி[illegible]

O31,6N49,S
N25

...ன்மதி எந்துயர் உன்துயரம்
...ல்உன்தொழில்எண்ணமில்லா துநது
...ணரு ளுன்னியே போதவிலா சமுடன்
...ர்நிலை தந்தருள் பூரணமங்கலையே
...நகைபனே பாலனுப் பெற்றவளே
...மனுந்தாயே உன்பாலரினும் எனையே
...னயாளுவாய் திவ்யா பாங்கியே
...த்த னிடத்துள் சிவகாமித்தாயே. 98

...பலவிவகாரம் உலகினி லெவ்வகைகள்
...கைசொல்லலாமோ உனதுபொய்மாயமுள்ள
...லமோத கரிவியுள்ளாள ரகை
...ண்மயல்கொண்டே சருதிபபேர் பொருதி
...லனுபோக மயன்விதியது தவிர
...ருளினையாலும் அரனருள் தன்னாலும்
...வலைநபதுமாற தெளிவருள் வாய்பரையே
...த்த னெம்மத்தனிடத்துள சிவகாமிததாயே 99

கற்றதைக் கற்பதும் கேட்டதைக் கேட்பதும் காசினி யாளருடன்
கண்டதைக் காண்பதும் உண்டதையுண்பதும் காதலினுல் மிகவும்
பெற்றதைக் களிப்புடன் பிரமைகொள்ளுதே மனம்
பேரிருள் நீங்கவும் ஞானருள் தேங்கவும பிரமை சதானந்தம்
உற்றென் மனத்தி லிருந்தமை உச்சியுள் நிற்சிவமே
வுள்புறம் பொன்ருய் இருந்த சௌந்தரி ஓங்காரருள் நாரி
சித்தனுய் சமைந்தவர் சிதம்பரந் தன்னில் சிறந்து நிறைந்தவளே
சிற்சபை நிர்த்தனெம்மத்தனிடத்துள சிவகாமிததாயே. 100

முற்றிற்று.

ஸ்ரீசிவகாம சுந்தரியம்பாள் திருவடிகளே வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

கிருஷ்ண அய்யர் ...வாமிகள் திருவடிகளேவாழ்க.

தமிழ்நாடு ஆவண . காப்பகம்
22434

## சதகம்,

சதகம்-என்பது அமிழ்நினுயி
தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்க
யுட்களைத் தன்னகத்துட் கொண்டு வருவ

இப்பெயரான் வழங்கும் வேறுபி
ளன அவற்றுட் சிலவருமாறு:—

1. குமரேசசதகம், 2. அறப்பளீசுர
சலசதகம், 4. அண்ணாமலைச்சதகம், 5.
6. எம்பிரான் சதகம், 7. சிவசங்கர சதகம்,
யம்மன் சதகம், 9. திருவேங்கட சதகம். 1
டார் சதகம், 11, தொண்டைமண்டலசதகம்,
டலசதகம், 13. பாண்டிமண்டலசதகம், 14.
சதகம், 15. ஈழமண்டல சதகம் முதலியன. இ
இயலை "விளையுமொருபொருண் மேலொருநூ
தல் சதகமென்ப"(இலக்கண விளக்கம் பாட்டியல் 87-
சூத்திரத்தானறிக. பிரபந்தங்களின் இயல்களைக்கூறும்
மைத்தமிழ் நூல்களாகிய பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை
முதலிய இயல்நூல்களில் சதகமென்னும் பிரபந்தம் ஒன்று உண்
டென்றேனும், அதனியல் இன்னதென்றேனுங் காணப்படாமை
யானும் சற்றேறக்குறைய 270...ஆண்டுகட்கு முன்னிருந்த
தமிழ்இலக்காகிய ஸ்ரீவைத்தியநாததேசிகர் இயற்றிய இலக்கண
விளக்கத்து அவர் புத்திரராகிய தியாகராஜதேசிகரியற்றிய பாட்
டியலில், சதகமென்பதொரு பிரபந்தமும் அதனியலும், செவ்வ
னே காணப்படுதலானும், இப்பிரபந்தம் பண்டைக் காலத்து
வழக்கினில்லையென்பதும் அதுபிற்காலத்திற்றான் வழக்கலாயிற்
றென்பதூஉம் ஆராய்தற்பாலன.

இந்நூலாசிரியர் இச்சதகத்து சைவநூல்களிற் கூறப்படும்
தத்துவம் முதலாகிய பொருள்களையெல்லாம் [illegible] அ
மைத்துக்கூறி யிருத்தல் புகழ்ந்து விட்க்கற்பாலது.

224229